பக்கங்கள்: 06

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 ஐப்பசி 19 புதன்கிழமை 04.11.2020 கதிர் 230

# யாழ்., வன்னியிலிருந்து ராணுவத்துக்கு ஆள்கள் தலா 4,500 பேர் திரட்டு

## மாதம் 60 ஆயிரம் ரூபா சம்பளம்

**(ந.லோகதயாளன்)**

**யாழ்ப்பாணம், நவம்பர்04**

**வடக்கு மாகாணத்தில் இருந்து 9 ஆயிரம் பேரைப் புதிதாகத் திரட்டி இராணுவத்தில் இணைக்க அரசு தீர்மானித்து நடவடிக்கை எடுத்து வருகிறது.**

**இன்று யாழ்ப்பாணத்தில் ஆளுநர் நடத்திய சந்திப்பில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டதாக அறிய வந்தது.**

2

## பொரளை பொலிஸில் 41 பொலிஸாருக்கு கொரோனாத் தொற்று



பொரளை பொலிஸின் 41 பொலிஸ் அதிகாரிகளுக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத் தப்பட்டுள்ளது.

அதன்படி, கொவிட் தொற்றுக் குள்ளான அனைத்து பொலிஸ் அதிகாரிகளும் தற்போது களுத் துறை பொலிஸ் வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பொரளை பொலிஸிற்கு பொது மக்கள் செல்வது தற்காலி மாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது.

## மூன்று வருடங்களுக்கு கொரோனா கொத்தணி

### தொற்று நோயியல் நிபுணர் அதிர்ச்சித் தகவல்

இலங்கையில் எதிர்வரும் இரண்டு அல் லது மூன்று வருடங்களுக்குக் கொரோனா வைரஸ் தொற்றுடன் தொடர்புடைய கொத் தணி உருவாகும் அபாயம் உள்ளது.

- இவ்வாறு தேசிய புத்திஜீவிகள் அமைப் பின் பொதுச் செயலாளரும் தொற்று நோயி யல் நிபுணருமான வைத்தியர் நிஹால் அபே சிங்க எச்சரிக்கை விடுத்துள்ளார்.

2

## எல்லை மீறும் கொரோனாவை கட்டுப்படுத்த ஒத்துழையுங்கள்

### நாட்டு மக்களிடம் இராணுவத் தளபதி அவசர வேண்டுகோள்



இலங்கையின் கொரோனா வைரஸின் மூன்றாவது அலை எல்லை மீறும் நிலையில் உள்ளது. இதை உடனடியாகக் கட்டுப்படுத்த நாட்டு மக்கள் அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். அத்தியாவசிய தேவை கள் இன்றி மக்கள் எவரும் வீட்டுக்கு வெளி யில் செல்லாமல் இருக்க வேண்டும்.

2

# இலுப்பைக்கடவை கிராம அலுவலர் வீதியில் காயங்களுடன் மர்மச் சாவு

### கொலையா? விபத்தா? விசாரணை நடக்கிறது



மாந்தை மேற்கு பிரதேச செயலகத் தின் கிராம அலுவலகர்களுக்கான பதில் நிர்வாக உத்தியோகத்தராக கடமை யாற்றும் இலுப்பைக்கடவை கிராம அலுவலரான விஜி என அழைக்கப்படும் எஸ்.விஜியேந்திரன்(வயது -55) என் பவர் நேற்று செவ்வாய்க்கிழமை இரவு மர்மமான முறையில் உயிரிழந்துள் ளார் என இலுப்பைக்கடவை பொலி ஸார் தெரிவித்தனர். அவர் கொலை செய்யப்பட்டிருக்கலாம் அல்லது விபத் தில் படுகாயமடைந்திருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது.

இலுப்பைக்கடவை -

2

## கொரோனாவால் மற்றுமொரு வயோதிபர் பரிதாப உயிரிழப்பு

இலங்கையில்கொரோனாவைரஸினால் பீடிக்கப்பட்டு மற்றுமொரு வயோதிபர் உயிரி ழந்துள்ளார்.

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த கொழும்பு 13, கொட் டாஞ்சேனையில் வசிக்கும் 78 வயதுடைய நபரே உயிரிழந்துள்ளார்.

இந்த நிலையில், இலங்கையில் கொரோ னாப் பலியெடுத்த மொத்த உயிர்களின் எண் ணிக்கை 24ஆக அதிகரித்துள்ளது.

## கிராண்ட்பாஸ் அடுக்குமாடியில் 16 பேருக்கு கொரொனா

கொழும்பு - கிராண்ட்பாஸ் பகுதியில் அமைந்துள்ள அடுக்கு மாடி வளாகத்தில் கொரோனா தொற்றாளர்கள் 16 பேர் அடை யாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் குறித்த பிர தேசத்தில் அமைந்துள்ள சுமார் 30வீடுகள் சுகாதாரபிரிவினரால் மூடப்பட்டுள்ளன எனத் தெரிவிக் கப்படுகிறது.

மேலும் வீடமைப்பு வளாகத் தில் வசிக்கும் அனைவரையும் தங்களின் வீடுகளுக்குள்ளே தனிமைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் சுகாதா ரப் பிரிவு தெரிவித்துள்ளது.

## கொரோனாவைக் கட்டுப்படுத்த மக்கள் ஒத்துழைப்பு அவசியம்!

### கோருகிறார் வடக்கு மாகாண பிரதிப் பொலிஸ் மா அதிபர் சஞ்சீவ



வடமாகாணத்தில் பொதுமக் களின் ஒத்துழைப்பின்றி கொரோ னாத் தொற்றை கட்டுப்படுத்த முடி யாது என வடக்கு மாகாண பிரதிப் பொலிஸ் மா அதிபர் சஞ்சீவ தர் மரட்ன தெரிவித்தார்

யாழ்ப்பாண நகரில் பொலி ஸாரால் கொரோனா தொடர்பான விழிப்புணர்வு செயற்பாட்டில் ஈடுபட்டனர் அந்த

2

## மரணச் சடங்கில் பங்கேற்ற 50 பேரும் தனிமைப்படுத்தல்

பாணந்துறைப் பகுதியில் உயிரிழந்த இளைஞரின் மர ணச் சடங்கில் கலந்துகொள்ள 50 இற்கும் மேற்பட்டவர்கள் சென்றிருப்பது தெரியவந்துள்ளது.

27 வயது இளைஞர் தற்கொலை செய்துகொண்ட நிலை யில் அவருக்குக் கொரோனா தொற்று இருப்பது உறுதி செய் யப்பட்டது.

தொடர்ந்து மரணச் சடங்கு நடத்தப்பட்டதில் அதில் 50 இற்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டதால்

2

## யானையுடன் மோதிய மோ.சைக்கிள் சாரதியைத் தாக்கிக் கொன்றது அது!

மாங்குளம், நவ.04

மாங்குளம் பொலிஸ் பிரி வுக்குட்பட்ட மாங்குளம் மல் லாவி வீதியில் மாங்குளம் நகர் பகுதியில் இருந்து முத லாவது கிலோ மீற்றர் பகுதி யில் யானை தாக்கி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கொடிகாமம் பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவர் தச்சு வேலைக்காக முல்லைத் தீவு மல்லாவி

2

## யாழ் நவீன சந்தையில் மூடப்பட்ட 4 கடைகளும் இன்று மீளத் திறப்பு



யாழ் நவீன சந்தைக் கட்டடத் தொகுதி யில் கொரோனா தொற்று அச்சத்தால் மூடப் பட்டிருந்த கடைகள் இன்றைய தினம் மீளத் திறக்கப்பட்டன.

கொழும்பிலிருந்து வருகை தந்து கொரோனாத் தொற்றுக்கு உள்ளானவ ரின் உறவினர்களின் நான்கு கடைகள் யாழ்ப்பாண சுகாதார வைத்திய அதிகாரி யினால் கடந்த சில

2

## நாடாளுமன்றச் செய்தியாளர்களில் இதுவரை ஐவருக்குக் கொரோனா!

### பலர் பி.சி.ஆர். பரிசோதனைக்கு அச்சத்தில் வீடுகளுக்கு ஓட்டம்

நாடாளுமன்றத்துக்குச் செய்தி சேக ரிப்புக்காகச் சென்று கொரோனா வைரஸ் தொற்றுக்கு இலக்காகிய மே லும் ஓர் ஊடகவியலாளர் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இதன்படி நாடாளுமன்றச் செய்தி சேகரிப்பில் ஈடுபடும் ஊடகவியலா ளர்களில் கொரோனாத் தொற்றுக்குள் ளானவர்களின் எண்ணிக்கை ஐந் தாக அதிகரித்துள்ளது.

இறுதியாக அடையாளம் காணப் பட்ட ஊடகவியலாளர்

2

## யானையுடன் மோதிய மோ. சைக்கிள் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கொல்லவிளாங்குளம் பகுதிக்கு வந்து வேலை புரிந்து வந்த நிலையில் நேற்று இரவு 10.15 மணி அளவில் தனது வேலையைநிறைவுசெய்துகொடிகாமத்தில் உள்ள வீட்டுக்குத் கொண்டிருந்துள்ளார்.

மாங்குளம் நகர்ப்பகுதியில் இருந்து சுமார் ஒரு கிலோ மீற்றர் தொலைவில் இரவு 10.30 மணியளவில் திடீரென வீதியை குறுக் கறுத்த யானையுடன் மோதி அவர் விபத்துக்குள்ளானார்.

யானை மோட்டார் சைக்கிள் மீதும் மோட்டார் சைக் கிளை செலுத்தி வந்த நபர் மீதும் கடும் தாக்குதல் மேற் கொண்டுள்ளது. இந்த தாக்குதலில் மோட்டார் சைக்கிளில் பயணித்த நபர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தில் 37 வயதுடைய 9 பிள்ளைகளின் தந்தையாகிய செட்டியாவெளி, பெரிய நாவலடி, கொடிகாமம், யாழ்ப்பாணம் என்ற முகவரியைச் சேர்ந்த ஆனந்தராசா விஜியானந்தன் என்ற நபரே உயிரிழந்துள்ளார். அவர் அண்மையிலேயே 9வது ஆண் பிள்ளைக்கு தந்தையானார்.

## யாழ் நவீன சந்தையில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தினங்களுக்கு முன் மூடப்பட்டிருந்தன.

இந்நிலையில் அந்தக் கடை உரிமையாளர்களுக்கு முதலாவது பி.சி.ஆர். பரிசோதனையில் தொற்று உறுதிப்படுத்தப்படவில்லை என்பதன் அடிப்படையில் இன்றைய தினம் அந்தக் கடைகளைத் திறப்பதற்கு சுகாதாரப் பகுதியினரால் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் அக்கடைகள் அனைத்தும் கிருமித் தொற்று நீக்கம் செய்யப்பட்டு இன்றைய தினம் திறந்து வைக்கப்பட்டன.

யாழ் மாநகர முதல்வர், யாழ்ப்பாணம் சுகாதார வைத்திய அதிகாரி, யாழ்ப்பாண பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, யாழ் வணிகர் கழக தலைவர் ஆகியோரின் பங்குபற்றுதலுடன் மூடப்பட்டிருந்த கடைகள் அனைத்தும் கிருமித் தொற்று நீக்கம் செய்யப்பட்ட பின்னர் திறக்கப்பட்டன. இந்தக் கடைகளில் பணியாற்றுபவர்களுக்கு கொரோனாத் தொற்றுத் தொடர்பான விழிப்புணர்வு செயற்பாடும் முன்னெடுக்கப்பட்டது.

## நாடாளுமன்றச் செய்தி .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தமிழ்க் தொலைக் காட்சி ஒன்றில் பணிபுரிபவராவார்.

ஆங்கிலப் பத்திரிகையைச் சேர்ந்த ஓர் ஊடகவியலாளர் முதன்முதலாக கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டார். அவருக்குப் பின்னர் இரண்டு சிங்களப் பத்திரிகைகளைச் சேர்ந்த மூன்று ஊடகவியலாளர்களுக்கும், தமிழ்த் தொலைக்காட்சியைச் சேர்ந்த ஓர் ஊடகவியலாளருக்கும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என நாடாளுமன்றக் குழு உறுதிப்படுத்தியுள்ளது.

இவர்கள் அனைவரும் 20ஆம், 21ஆம் திகதிகளில் நாடாளுமன்றத்தில் நடைபெற்ற அரசமைப்பின் 20ஆவது திருத்தம் மீதான விவாதம், வாக்கெடுப்புகளைச் செய்தியாக அறிக்கையிடச் சென்றவர்கள்.

அன்றைய தினங்களில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும்கூட நாடாளுமன்றத்துக்குச் சென்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, நாடாளுமன்றச் செய்தியாளர்களில் முதல் கொரோனா நோயாளி அடையாளம் காணப்பட்ட பின்னர் மேற்படி செய்தியாளர்களில் சிலரே பி.சி.ஆர். பரிசோதனையை மேற்கொண்டுள்ளனர் எனவும், பலர் அச்சம் காரணமாக பி.சி.ஆர். பரிசோதனையை மேற்கொள்ளாமல் தத்தமது வீடுகளுக்குச் சென்று சுயதனிமைப்படுத்தலில் ஈடுபட்டுள்ளனர் எனவும் தெரியவந்துள்ளது.

இது தொடர்பில் குறித்த செய்தியாளர்கள் பணிபுரியும் ஊடக நிறுவனங்கள் முக்கிய கவனம் செலுத்த வேண்டும் என்று நாடாளுமன்றக் குழு அறிவித்துள்ளது.

இதனிடையே நாடாளுமன்றில் நேற்று சுகாதார கட்டளைச் சட்டங்கள் மீதான வர்த்தமானி அறிவித்தல் தொடர்பான விவாதத்தின்போது, நாடாளுமன்ற ஊடகவியலாளர்கள் எவரும், நாடாளுமன்ற வளாகத்துக்குள் வைத்து கொரோனாத் தொற்றுக்குள்ளாகவில்லை என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்திருந்தார்.

## கொரோனாவைக் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
விழிப்புணர்வு செயற்பாட்டில் ஈடுபட்ட பிரதிப்பொலிஸ்மாஅதிபர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

தற்போது இலங்கையில் கொரோனாத் தொற்று அதிகளவில் பரவிவருகின்றது. வடக்கு மாகாணத்தைப் பொறுத்த வரை நான் வடக்கு மாகாண பிரதிப் பொலிஸ் மா அதிபராகப் பதவியேற்றதன் பின்னர் கொரோனா ஒழிப்பு தொடர்பில் பொலிஸாரால் பல்வேறுபட்ட வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன

அதன் ஓர் அங்கமாக இன்றைய தினம் யாழ்ப்பாண குடாநாட்டில் மக்கள் முகக் கவசம் அணிதல் தொடர்பான ஒரு விழிப்புணர்வு செயற்பாட்டை மேற்கொண்டு வருகின்றோம்.

வடக்கு மாகாணத்தைப் பொறுத்த வரைக்கும் கொரோனா தொற்றைக் கட்டுப்படுத்துவதற்குப் பொதுமக்கள் பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும். அதாவது சுகாதாரத் திணைக்களத்தினரின் சுகாதார நடைமுறைகளைக் கட்டாயமாகப் பொதுமக்கள் பின்பற்ற வேண்டும்.

அதாவது சமூக இடைவெளியானது மிகவும் முக்கியமான ஒன்றாகும். தற்போதைய சூழ்நிலையில் பொது மக்கள் ஒன்று கூடும் இடங்களில் கட்டாயமாக சமூகஇடைவெளிபேணுதல்வேண்டும்.

அத்தோடு மக்கள் பெரும்பாலும் வீடுகளில் இருந்து தங்களுடைய கடமைகளைச் செய்கின்றமை மிகச் சாலச் சிறந்தது. எனினும் வடக்கு மாகாணத்தில் கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்த வேண்டுமாக இருந்தால் பொதுமக்களின் ஒத்துழைப்புடனே அது சாத்தியமாகும். அத்துடன் வீட்டை விட்டு வெளியில் வரும் போது கட்டாயமாக முகக் கவசம் அணிந்து வெளியில் வரவேண்டும் எனவும் வடக்கு மக்கள் தற்கால சூழ்நிலையில் தங்களையும் தங்களுடைய சமூகத்தையும் பாதுகாக்க வேண்டியது அனைவரதும் பொறுப்பு. - எனவும் தெரிவித்தார்.

## மரணச் சடங்கில் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அவர்களுக்கும் கொரோனா தொற்றிருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

இதனால் அவர்கள் அனைவரும் தற்போது தனிமைப்படுத்தி வைக்கப்பட்டுள்ளதுடன் பி.சி.ஆர். பரிசோதனையும் நடத்தப்படவுள்ளது.

## இலுப்பைக்கடவை ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஆத்திமோட்டை குறுக்கு வீதியில் படுகாயங்களுடன் அவர் முதலில் கண்டுபிடிக்கப்பட்டார்.

சம்பவம் இடம் பெற்ற பகுதிக்கு மன்னார் மாவட்ட பதில் நீதவான் இ.கயஸ் பல்டானோ இன்றைய தினம் புதன்கிழமை மதியம் சென்று பார்வையிட்டமையோடு விசாரணைகளையும் முன்னெடுத்தார்.

சட்ட வைத்திய அதிகாரி வைத்தியர் எஸ்.பிரணவன், திடீர் மரண விசாரணை அதிகாரி றொஜன் ஸ்ரலின் ஆகியோரும் சம்பவஇடத்தில்பிரசன்னமாயிருந்தனர்.

உயிரிழந்த கிராம அலுவலர் செலுத்தி வந்த மோட்டார் சைக்கிள் மற்றும் தலைக்கவசம் ஆகியவை இரத்தத்துடன் காணப்பட்டன. அவற்றைப் பார்வையிட்டமையோடு உரிய விசாரணைகளை மேற்கொள்ளுமாறு இலுப்பைக்கடவை பொலிஸாருக்கு பதில் நீதிவான் உத்தரவிட்டார்.

அதனைத் தொடர்ந்து மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு வருகை தந்த பதில் நீதிவான் சடலத்தை அங்கு பார்வையிட்டதோடு, பிரேத பரிசோதனையின் பின் உறவினர்களிடம் சடலத்தை கையளிக்குமாறு உத்தரவிட்டார்.

மேற்படி கிராம உத்தியோகத்தர் நேற்று செவ்வாய்க்கிழமை மாலை 8 மணியளவில் கடமை முடிந்து தனது வீடு நோக்கி சென்று கொண்டிருந்த போது கள்ளியடி ஆத்திமோட்டை பகுதியில் வைத்து மர்மமான முறையில் அவர் படுகாயமடைந்துள்ளார்.

இவரது தலை மற்றும் உடல் பாகங்களில் பெருங் காயங்கள் காணப்பட்டன. அவர் இனம் தெரியாத நபர்களினால் கூறிய ஆயுதத்தினால் தாக்கப்பட்டிருக்கலாம் எனவும் சந்தேகம் எழுந்துள்ளது.

இந்தக் கிராம அலுவலர் பள்ளமடு வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு பின்னர் மன்னார் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட போது உயிரிழந்துள்ளார் என இலுப்பைக்கடவை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவரின் மரணம் தொடர்பாக இது வரை எவரும் கைது செய்யப்படவில்லை. தீவிர விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்

## எல்லை மீறும் ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அதனூடாகவே கொரோனாவைப் பரவலைக் கட்டுப்படுத்த முடியும்.

- இவ்வாறு கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மேல் மாகாணத்தில் கொரோனாப் பரவல் அதிகரித்ததால் அம்மாகாணத்தை முடக்கியுள்ளோம். ஏனைய மாகாணங்களில் சில கிராமங்கள் மட்டும் முடக்கப்பட்டுள்ளன. கொரோனாக் கொத்தணிப் பரவலைத் தடுக்கும் வகையிலேயே இந்த நடவடிக்கையை முன்னெடுத்துள்ளோம்.

முழு நாட்டையும் முடக்கினால் நாட்டின் பொருளாதாரத்தில் பாரிய வீழ்ச்சி ஏற்படும். அதனைக் கருத்தில்கொண்டே நாம் செயற்படுகின்றோம்.

கொரோனாவால் ஏற்படும் உயிரிழப்புக்கள் ஒரு புறமிருக்கப் பட்டினியால் மக்களைச் சாகடிக்க நாம் விரும்பவில்லை. நாட்டை முழுமையாக ஏன் முடக்கவில்லை என்று கேட்பவர்களிடம் இந்தப் பதில் கருத்தைச் சொல்ல விரும்புகின்றோம்.

எனினும், கொரோனா எல்லை மீறிச் சென்றால் முழு நாட்டையும் முடக்குவது தவிர்க்க முடியாது. இந்த நிலைமை ஏற்படாமல் இருக்க மக்களின் ஒத்துழைப்பு எமக்கு மிகவும் அவசியமாகும். அத்தியாவசிய தேவைகள் இன்றி மக்கள் எவரும் வீட்டுக்கு வெளியில் செல்லாமல் இருக்க வேண்டும்.

சுகாதார வழிகாட்டல்களை அனைவரும் பின்பற்ற வேண்டும். கொரோனாத் தொற்றுச் சந்தேகநபர்கள் பி.சி.ஆர். பரிசோதனையைத் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும். தனிமைப்படுத்தலில் இருப்பவர்கள் விதிமுறைகளை மீறிச் செயற்படாமல் இருக்க வேண்டும். - என்றார்.

## யாழ்., வன்னியிலிருந்து .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கொரோனாத் தடுப்பு நடவடிக்கை தொடர்பாக ஐந்து மாவட்ட அதிகாரிகளுடனும் வடக்கு ஆளுநர் இன்று நடத்திய சந்திப்பின் போதே இந்த விவரம் வெளியிடப்பட்டது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இருந்து 4 ஆயிரத்து 500 பேரும், வன்னிப் பகுதியில் இருந்து 4 ஆயிரத்து 5 00 பேருமாகவே இந்த 9 ஆயிரம் பேரும் இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர். இராணுவ உதவிப் பணியாளர்களாக மரவேலை, மேசன்வேலைஉள்ளிட்டவேலைகளுக்கான ஆள்திரட்டாக இதுஅமையும் என்றும் கூறப்பட்டது.

இவ்வாறு பணிக்கு அமர்த்தப்படுவோர் வடக்கு மாகாணத்திலேயே பணியாற்றும்சந்தர்ப்பம்வழங்கப்படுவதோடு மாதாந்தம் 60 ஆயிரம் ரூபா வரையில் சம்பளம் பெற முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

விரைவில் இதற்கான விண்ணப்பங்கள் கோரப்படும். விண்ணப்ப முடிவு தினம் இம்மாதம் 29ஆம் திகதி எனவும் தெரிவிக்கப்பட்டது.

## மூன்று வருடங்களுக்கு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கொழும்பில் இன்று நடத்தப்பட்ட தேசிய மக்கள் சக்தியின் செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு அவர் இதனைக் கூறியுள்ளார்.

இவ்வாறான அபாய நிலை உள்ளமையால் அது தொடர்பில் தொடர்ந்து மக்களுக்கு அறிவுறுத்துவது அவசியம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆரோக்கியமான ஒருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று ஏற்படும் போது, அவரது வீட்டிலுள்ள குடும்ப உறுப்பினர்கள் மற்றும் ஏனைய நபர்களுக்குத் தொற்று ஏற்படும் அபாய நிலை உள்ளது என்றும் நிஹால் அபேசிங்க சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸ் தொற்று நிலை குறித்து அனைவரும் மிகவும் அவதானத்துடன் இருக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம் -
076 443 8622



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## அரசுத் தலைமையின் தவறு

பல சமயங்களில் அரசியல் தலைமைகளின் தீர்க்கமான – தீர்மானகரமான – முடிவுகளில்தான் நாட்டின் தலைவிதி எழுதப்படும் நிலைமை ஏற்படுகின்றது.

இப்போது அத்தகைய ஒரு விடயம் குறித்து அதிகம் பேசப்படுகின்றது.

நாட்டில் ஏற்பட்ட கொரோனாத் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்துவதில் நாட்டின் அரசியல் தலைமை எடுத்த முடிவு – தீர்மானம் – இப்போது பரவலாக விமர்சிக்கப்படுகின்றது.

நாட்டில் முதன் முதலில் மார்ச், ஏப்ரல் மாதங்களில் தொற்று ஏற்பட்ட போது அரசுத் தலைமை எடுத்த இறுக்கமான நடவடிக்கைகள் பல தரப்பினாலும் விதந்துரைக்கப்பட்டன. மற்றைய நாடுகளுக்கு இலங்கை முன்மாதிரியாகச் செயற்படுவதாக – செயற்பட்டதாக – சர்வதேச மட்டத்தில் கூட சிலாகிக்கப்பட்டது.

கடந்த பொதுத் தேர்தலில் ஆளும் பொதுஜன பெரமுனவுக்கு எதிர்பாராத பெரு வெற்றியை – நாடாளுமன்றத்தில் மூன்றில் இரு பங்கு பெரும்பான்மையை – ஈட்டிக் கொடுக்க வைத்ததில் அதுவரை காலமும் கொரோனா நெருக்கடியைத் திறம்படவும் இறுக்கமாகவும் கையாண்ட அரசுத் தலைமையின் சிறப்பும் கணிசமாகப் பங்களித்திருந்தது என்பது மறுக்க முடியாதது.

முதன் முதலில் தொற்று ஏற்பட்ட சமயத்தில் அரசுத் தலைமையின் நடத்தை குறித்து மக்கள் வெளிப்படையாக மெச்சும் நிலைமை கூட நிலவியது.

*"தப்பித் தவறிய முன்னைய நல்லாட்சி அரசினது போல – மைத்திரி, ரணில் தலைமை இருந்திருந்தால் இந்தத் தொற்றை அது கையாளும் விதத்தில் நாடு அழிந்துதான் போயிருக்கும். புதிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, தமது இராணுவப் பின்னணியுடனான செல்நெறிப் போக்கில் இந்த விடயத்தைப் போர்கால விவகாரம் போலக் கருதி, கையாண்டு இறுக்கமான நடவடிக்கைகளை எடுத்துப் பரவலைக் கட்டுப்படுத்தி விட்டார்"* என்று சான்றிதழ்கள் பொதுமக்கள் தரப்பினால் வழங்கப்பட்டமையும் மறுக்க முடியாததே.

வெலிசறைக் கடற்படை முகாமில் சுமார் ஆயிரம் படையினருக்கு இந்த வைரஸ் தொற்று ஏற்பட்டு ஒரு புதிய கொத்தணிப் பரவல் உருவான போதும் –

அதன் பின்னர் கந்தக்காடு புனர்வாழ்வு மையத்தை ஒட்டி சுமார் ஐந்நூறு பேருக்கு அந்தத் தொற்று பரவிய போதும் –

அவற்றைக் கட்டுப்படுத்தி, நிலைமையை கட்டுக்குள் கொண்டு வந்தமை தொடர்பில் நாட்டின் அரசியல் தலைமை மெச்சப்பட்டது.

கொரோனா வைரஸ் பரவல் தடுப்பு செயலணியின் தலைவராக நாட்டின் இராணுவத் தளபதியை நியமித்த செயற்பாடும், இந்தத் தடுப்பு நடவடிக்கைகளுக்கு சுகாதார, மருத்துவ ஊழியர்களுக்கு அப்பால், முப்படையினர் மற்றும் பொலிஸாரை ஈடுபடுத்தி நடவடிக்கைகளை மேற்கொண்ட போக்கும் கூட இதனால் நியாயப்படுத்தப்பட்டன.

ஆனால், அதன் பின்னர் மினுவாங்கொடை 'பிரண்டிக்ஸ்' ஆடைத் தொழிற்சாலை, பேலியகொட மீன் சந்தை ஆகியவற்றை ஒட்டி வைரஸ் தொற்றுக்கான இரண்டு புதிய கொத்தணிகள் உருவாகி, அது பல்லாயிரம் பேருக்குப் பரவிய போது, அதனைக் கட்டுப்படுத்துவதில் மிகவும் மெத்தனமாகவும், பலவீனமாகவும் நாட்டின் தலைமை நடந்து கொண்டமையைப் பார்த்து நாடும் மக்களும் பெரும் விசனமடைந்திருக்கின்றார்கள்.

*"பட்டினிச் சாவைத் தடுக்கவே நாடு ரீதியான முடக்கத்தைத் தவிர்க்க முயற்சித்தோம்"* என்று வைரஸ் பரவலுக்கு இடமளித்த தமது பலவீனத்துக்கு இப்போது காரணம் கூறுகின்றார் அல்லது அதை நியாயப்படுத்துகின்றார் பரவல் தடுப்புச் செயலணியின் தலைவர் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவீந்திர சில்வா.

வருடம் தோறும், பல்லாயிரம் கோடி ரூபாவை உலக நாடுகளிடம் கடன் வாங்கிக் குவித்து, நாட்டை பொருளாதாரப் பின்னடைவில் தள்ளியபடி, அந்த வசதி, வாய்ப்பில் ஆட்சி நடத்தும் தரப்புகள், நாட்டின் பொருளாதாரம் உட்பட ஒட்டுமொத்த மக்களின் வாழ்க்கையைச் சூறையாடும் வைரஸ் ஆபத்திலிருந்து நாட்டைக் காப்பதற்கு, முழு நாட்டையும் ஒரு மாதம் அல்லது கூடியது இரண்டு மாதங்கள் முடக்கவும் அதனால் ஏற்படக் கூடிய பொருளாதார 'றிஸ்கை' (ஆபத்தை) எதிர்கொள்ளவும் தயார் இல்லை என்று கூறுவது அபத்தமாகும்.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்கள் குறித்து போதுமான முன்னெச்சரிக்கைகள் விடுக்கப்பட்டும் கூட அந்தப் பேராபத்தைத் தடுப்பதற்கான பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்கத் தவறிய பெருங்குற்றத்துக்காக முன்னைய ஆட்சியாளர்கள் இப்போது விசாரணைக்கு உள்ளாகியுள்ளனர்.

தற்போதைய 'கொவிட் 19' தொற்றுப் பரவல் எல்லை மீறலாம் என்று எச்சரிக்கைகள் தாராளமாக விடுக்கப்பட்டும், போதிய இறுக்கமான நடவடிக்கைகளை எடுக்கத் தவறி, அது வரையறையின்றிப் பரவுவதற்குக் காரணமானோர் குறித்து பின்னர் விசாரணை செய்ய வேண்டி நேர்ந்தாலும் ஆச்சரியப்படத் தேவையில்லை.

# தனிமைப்படுத்தலில் உள்ளவர்களுக்கு யாழில் இன்று நிவாரணங்கள் வழங்கல்!



## அரச அதிபர் அறிவிப்பு

யாழ். மாவட்டத்தில் சுய தனிமைப்படுத்தலில் உள்ள குடும்பங்களுக்கான ஐயாயிரம் ரூபா நிவாரணப் பொதி இன்று முதல் விநியோகிக்கப்படுவதாக யாழ். மாவட்ட அரச அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்துள்ளார்.

இந்த நிவாரணப் பொதிகள் அந்தந்தக் கிராம சேவகர்கள் ஊடாகத் தனிமைப்படுத்தலில் உள்ள குடும்பங்களுக்கு வழங்கி வைக்கப்படவுள்ளன.

யாழ். மாவட்டத்தில் சுய தனிமைப்படுத்தப்பட்டுள்ளோரின் தரவுகள் கடந்த முதலாம் திகதி உரிய செயலணிக்கு அனுப்பப்பட்டு இரண்டாம் திகதி நிவாரணம் வழங்குவதற்கான அனுமதி கிடைத்தது.

எனவே, முதற்கட்டமாக யாழ். மாவட்ட 15 பிரதேச செயலக பிரிவுகளில் சுயதனிமைப்படுத்தலில் உள்ள 509 குடும்பங்களுக்கு இன்றிலிருந்து நிவாரணப் பொதிகள் வழங்கப்படவுள்ளன என அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, யாழ். மாவட்டத்தில் கொரோனாத் தொற்றுக்கு உள்ளானவர்களுடன் நேரடியாகத் தொடர்புகளைப் பேணியவர்கள் என இன்றைய நிலைவரப்படி 772 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 700 பேர் வீடுகளில் சுய தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்கள் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# பல்கலைக் கழகங்களில் 10 ஆயிரம் மாணவர்கள் மேலதிகமாக இணைப்பு

நாட்டில் உள்ள பல்கலைக்கழகங்களில் இந்த வருடம் மேலதிகமாக 10 ஆயிரம் மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

இவர்களுக்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக்கொடுக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

கடந்த வருடத்தில் பல்கலைக்கழக பிரவேசத்தில் உள்வாங்கப்பட்ட மொத்த மாணவர்களின் எண்ணிக்கை சுமார் 30 ஆயிரம் ஆகும்.

இந்த நிலையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் சுபிட்சம்மிக்க நாடு என்ற தொலைநோக்கின் கீழ் இம்முறை 41 ஆயிரத்து 500 மாணவர்களுக்கு பல்கலைக்கழகத்துக்கான சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

இதற்கமைவாக கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இம்முறை மருத்துவ பீடத்துக்கு 371 மாணவர்களும், பொறியியல் பீடத்துக்கு 405 மாணவர்களும், சட்ட பீடத்துக்கு 126 மாணவர்களும், உயிரியல் தொழில்நுட்ப மற்றும் பொறியியல் தொழில்நுட்ப பீடத்துக்கு 350 மாணவர்களும் என்ற அடிப்படையில் மாணவர்கள் மேலதிகமாக இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

முகாமைத்துவ பீடத்துக்கு 900 மாணவர்களும், கலைப்பீடத்துக்கு 815 மாணவர்களும், விவசாயம், விஞ்ஞானம் உள்ளிட்ட ஏனைய பட்டப்படிப்பு கற்கைநெறிகளுக்காக 6 ஆயிரம் மாணவர்களும் இம்முறை கூடுதலாக இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர்.

இது தொடர்பாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க பல்கலைக்கழக அனுமதி தொடர்பிலான மேல் முறையீடு உள்ளிட்ட ஏனைய விடயங்கள் தொடர்பில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தின் ஊடாக அல்லது www. ugc.ac.lk என்ற மின்னஞ்சல் மூலம் சமர்ப்பிக்க முடியும் என்று குறிப்பிட்டார்.

உயர் நீதிமன்றத்தில் அளிக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாகவும், அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட கொள்கை ரீதியிலான தீர்மானத்துக்கு அமைவாகவும் முடிந்த வரையில் பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை இணைத்துக்கொள்ளும் கொள்கைக்கு அமைவாகவும் இம்முறை பல்கலைக்கழகங்களுக்கு மேலதிகமாக 10 ஆயிரம் மாணவர்களை இணைத்துக் கொள்ள நாம் நடவடிக்கை மேற்கொண்டோம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# ஊரடங்கை மீறிய 201 பேர் 24 மணி நேரத்தில் கைது!

தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவுகளை மீறிய குற்றச்சாட்டுக்காக இன்று காலை 6 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணி நேரப் பகுதியில் 201 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் இதன்போது 31 வாகனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், பிரதிப் பொலிஸ் மா அதிபருமான அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

ஒக்ரோபர் 04 ஆம் திகதி முதல் இதுவரையான காலப் பகுதியில் தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவுகளை மீறிய குற்றச்சாட்டுக்காக இதுவரை 2 ஆயிரத்து 193 நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளமையுடன், 338 வாகனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதனிடையே அரசாங்கத்தால் பிறப்பிக்கப்பட்ட சுகாதார மற்றும் பாதுகாப்பு உத்தரவுகளை பின்பற்றத் தவறியமைக்காக கடந்த நான்கு நாள்களில் 75 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேல் மாகாணத்தில் 112 பொலிஸ் பகுதிகளிலும் குளியாப்பிட்டி, எஹெலியகோடா மற்றும் குருநாகல் நகராட்சி மன்ற பகுதிகளிலும் தனிமைப்படுத்தப்பட்ட ஊரடங்கு உத்தரவு தற்போது நடைமுறையில் உள்ளது.

ஊரடங்கு உத்தரவு உள்ள அல்லது நடைமுறையில் இல்லாத பகுதிகளில் வசிப்பவராக இருந்தபோதிலும், அனைவரும் சுகாதார ஆலோசனைகளை பின்பற்றுமாறும் பொலிஸார் வலியுறுத்தியுள்ளனர்.

# மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது பொருளாதார மத்திய நிலையம்!

தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்ட பகுதிகளிலுள்ள அனைத்து பொருளாதார மத்திய நிலையங்களின் செயற்பாடுகளும் இன்று (புதன்கிழமை) மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

விவசாய அமைச்சின் செயலாளர், மேஜர் ஜெனரல் சுமேத பெரேரா இதனைத் தெரிவித்துள்ளார்.

இரத்மலானை, ஹோகந்தர, மீகொட, வெயாங்கொடைத மற்றும் நாரஹேன்பிட்டிய பொருளாதார மத்திய நிலையங்களின் செயற்பாடுகளே இவ்வாறு மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

எவ்வாறாயினும், இந்த மத்திய நிலையங்களில் சில்லறை வியாபாரங்கள் இடம்பெறமாட்டா என அறிவிக்கப்பட்டுள்ளது.

# கடலில் மிதந்து வந்தது கஞ்சா!

தமிழகத்தின் புதுக்கோட்டை மாவட்டத்தில் தெற்கு புதுக்குடி மற்றும் வடக்கு புதுக்குடி அருகே கடல் பகுதியில் மிதந்து வந்த மர்ம மூடைகளை அங்குள்ள மீனவ மக்கள் கடலோர பாதுகாப்பு குழுவினரிடம் ஒப்படைத்துள்ளனர்.

புதுக்கோட்டை மாவட்டத்தின் கடற்கரை பகுதியான புதுக்குடி கிராமத்தில் வசிக்கும் பாலமுருகன், தனக்குச் சொந்தமான பைபர் படகில் மீனவர்களுடன் கடலுக்கு மீன்பிடிக்கச் சென்றுள்ளார்.

அப்போது கடலின் மேல்பகுதியில் சணல் சாக்கு மூடை மிதந்து வந்துள்ளது. அதைக்கண்ட பாலமுருகன் மற்றும் உடன் இருந்த மீனவர்கள் மூடையை மீட்டு கரைக்குக் கொண்டு வந்து, கடலோரப் பாதுகாப்புக் குழுவினரிடம் தகவல் தெரிவித்துள்ளனர்.

சம்பவ இடத்துக்கு வந்த ஆய்வாளர், சாக்குமூடையை பிரித்து பார்த்தபோது அதில் கஞ்சாப் பொட்டலங்கள் இருந்துள்ளன.

மேலும் அதிகாரிகள் சாக்கு மூடையைப் பிரித்து பார்த்தபோது உள்ளே 14 கஞ்சா பண்டல்கள் இருந்துள்ளன.

இதனிடையே, வடக்கு புதுக்குடி கிராமத்திலிருந்து ஆரியசாமி என்பவருக்குச் சொந்தமான பைபர் படகில் அதே ஊரைச் சேர்ந்த 2 மீனவர்கள் மீன்பிடிக்க சென்றபோது கிடைத்த மூடையிலும் கஞ்சா பொட்டலம் இருந்துள்ளது. ஒரே நாளில் இரண்டு பகுதிகளில் கிடைத்த கஞ்சா பொட்டலங்களின் மொத்த எடை 56 கிலோ என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும் இந்தச் சம்பவம் தொடர்பாகக் கடலோரப் பாதுகாப்புக்குழு ஆய்வாளர் முத்துக்கண்ணு விசாரணை மேற்கொண்டு சிவகங்கை மாவட்ட போதை பொருள் நுண்ணறிவு பிரிவுக்குத் தகவல் அளித்துள்ளார்.

சம்பவ இடத்துக்கு விரைந்து வந்த நுண்ணறிவுப் பிரிவு காவல் ஆய்வாளர் ஹேமலதாவிடம் மீட்கப்பட்ட கஞ்சா பொட்டலங்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன.



# மூன்று ரக்பேல் விமானங்கள் இந்தியாவுக்கு வருகின்றன!

இந்திய விமானப் படைக்காக மேலும் மூன்று ரக்பேல் போர் விமானங்கள் நாளைய தினம் இந்தியாவுக்கு கொண்டு வரப்படவுள்ளன.

பிரான்ஸின் இஸ்ட்ரஸ் நகரிலுள்ள விமானத் தளத்தில் இருந்து மூன்று ரக்பேல் விமானங்களும் கொண்டு வரப்படுகின்றன.

அவற்றை எங்கும் இடைநிறுத்தாமல் நேராக அரியானா மாநிலம் அம்பாலாவில் உள்ள விமானப்படைத் தளத்துக்குக் கொண்டுசெல்ல ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதற்காக அந்த விமானங்களுக்கு நடுவானிலேயே எரிபொருள் நிரப்ப ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதற்காக பிரான்ஸ் விமானப்படையின் எரிபொருள் நிரப்பும் விமானமும் ரக்பேல் விமானங்களுடன் பயணிக்கவுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஏற்கனவே இந்திய விமானப் படையில் ஐந்து ரக்பேல் போர் விமானங்கள் பிரான்ஸில் இருந்து கொண்டுவரப்பட்டுள்ளன.

பிரான்ஸிடம் இருந்து மொத்தம் 36 ரக்பேல் விமானங்களை இந்திய மதிப்பில் 56 ஆயிரம் கோடி ரூபா செலவில் கொள்வனவு செய்வதற்கு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# இந்திய - சீனப் பிரச்சினை 8 ஆவது சுற்றுப் பேச்சு?




இந்திய – சீனப் படைகளுக்கு இடையே நிலவி வரும் மோதல் போக்கை முடிவுக்குக் கொண்டு வரும் வகையில் 8 ஆம் கட்ட பேச்சு நடத்த வாய்ப்புள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

கிழக்கு லடாக் எல்லையில் கடந்த மே மாதம் முதல் இந்திய – சீனப் படைகளுக்கு இடையே மோதல் போக்கு நிலவி வருகிறது. இதனை முடிவுக்குக் கொண்டுவரும் வகையில் ஏழு சுற்று பேச்சுகள் நடைபெற்றுள்ளன. இருப்பினும் இன்னும் இணக்கப்பாடு எட்டப்படவில்லை.

குறிப்பாக எல்லையில் நிலைநிறுத்தப்பட்டுள்ள சீன படைகளை விலக்கிக் கொள்வதில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை என்பது சுட்டிக்காட்டத்தக்கது. இந்த நிலையிலேயே எட்டாம் சுற்று பேச்சு நடைபெறவுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

முன்னதாக கடந்த ஜூன் மாதம் கல்வான் பள்ளத்தாக்கில் இருநாட்டுப் படைகளுக்கும் இடையே நிகழ்ந்த மோதலில் இந்திய வீரர்கள் 20 பேர் உயிரிழந்துள்ளமையுடன், சீனத் தரப்பில் 35 பேர் உயிரிழந்துள்ளனர் எனத் தகவல் வெளியானது. ஆனால் அதனை அந்நாட்டு இராணுவம் உறுதிப்படுத்தவில்லை என்பது குறிப்பிடப்பட்டது.

# கொரோனாப் பாதிப்பு 83 லட்சம் தாண்டியது!



இந்தியாவில் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 83 லட்சத்தைத் தாண்டியுள்ளது.

நாடு முழுவதும் நேற்று ஒரே நாளில் 46 ஆயிரத்து 254 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதியாகியுள்ளது. இதனால் கொரோனா பாதித்தோர் எண்ணிக்கை 83 லட்சத்து 13 ஆயிரத்து 877ஆக உயர்ந்துள்ளது.

நேற்று ஒரே நாளில் 514 பேர் கொரோனாவுக்குப் பலியாகினர். இதனால் பலியானோர் எண்ணிக்கை ஒரு லட்சத்து 23 ஆயிரத்து 611 ஆக உம் அதிகரித்துள்ளது.

நேற்று ஒரே நாளில் கொரோனாவிலிருந்து 53 ஆயிரத்து 357 பேர் குணமாகி வீடு திரும்பியமையால், குணமானோர் எண்ணிக்கை 76 லட்சத்து 56 ஆயிரத்து 478ஆக உயர்ந்துள்ளது.

நேற்று ஒரே நாளில் சிகிச்சை பெறுவோர் எண்ணிக்கை 7 ஆயிரத்து 618 குறைந்தமையால், சிகிச்சை பெறுவோர் எண்ணிக்கை 5 லட்சத்து 33 ஆயி ரத்து 787ஆகச் சரிந்துள்ளது.

# இராணுவத் தளபதி நேபாளம் செல்கிறார்



இந்திய இராணுவத் தளபதி நரவானே மூன்று நாள் சுற்றுப்பயணமாக இன்று (புதன்கிழமை) நேபாளம் செல்லவுள்ளார்.

இந்தியா-நேபாளத்துக்கு இடையிலான உறவில் விரிசல் ஏற்பட்டுள்ள நிலையில் இராணுவத் தளபதியின் இந்த பயணம் முக்கியத்துவம் வாய்ந்ததாகப் பார்க்கப்படுகிறது.

இதன்போது நேபாள ஜனாதிபதி வித்யாதேவி பண்டாரி, பிரதமர் கே.பி. சர்மா ஒலி ஆகியோரை நரவானே சந்திப்பார் என்றும் முக்கிய அரசியல் தலைவர்கள் மற்றும் உயர் இராணுவ அதிகாரிகளுடன் பேச்சு நடத்துவார் என்றும் இந்திய இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மேலும் நரவானே நேபாள இராணுவத் தலைமையகத்துக்குச் செல்லவுள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகிறது. இதனைத் தொடர்ந்து வெள்ளிக்கிழமை பிரதமர் சர்மா ஒலியை நரவானே சந்தித்து பேசவுள்ளார். இதன்போது நேபாளத்தின் புதிய வரைபட பிரச்சினை தொடர்பாக கலந்தாலோசிக்கப்படவுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

மேலும் இந்தியா - நேபாள நாட்டு இராணுவங்களுக்கு இடையே ஒத்துழைப்பை மேம்படுத்துவது தொடர்பாகவும், இரு நாட்டு எல்லையைத் திறன்பட நிர்வகிப்பது பற்றியும் தளபதி தாப்பாவுடன், நரவானே விரிவான பேச்சு நடத்துவார் எனவும் கருதப்படுகிறது.

## தலையணைக்குக் கீழே சார்ஜில் போன் போட்டவர் தீப்பிடித்து காயம்!

கேரளாவில் தலையணைக்குக் கீழ் மொபைல் போனை சார்ஜ் போட்டபடி தூங்கியவர் போன் தீப்பிடித்ததில் காயமடைந்தார்.

கொல்லம் மாவட்டம் ஒச்சிரா என்ற இடத்தைச் சேர்ந்த சந்திரபாபு என்பவர் லொறி ஓட்டுநராகப் பணியாற்றி வருகிறார். நேற்று வீட்டில் இருந்த இவர் தலையணைக்குக் கீழே தனது மொபைல் போனை சார்ஜ் செய்யவைத்து விட்டு தூங்கியுள்ளார்.

அப்போது மொபைல் போன் வெடித்து தலையணையில் தீப்பிடித்து அவரின் முகம் மற்றும் தோள் பட்டையில் காயமேற்பட்டது. இதை யடுத்து சந்திரபாபு அருகில் உள்ள வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.


கல்யாணமாலை
வட சர்வதேச திருமண சேவை

மணமகன் விவரம்
பிறந்த திகதி – 1988.03.17
மதம் – இந்து V
நட்சத்திரம் – பூரட்டாதி
பாவம் – 9 1/2
கல்வி – Bsc பட்டதாரி
தொழில் – ஆசிரியர்
எதிர்பார்ப்பு – அழகான உத்தியோகப் பெண்.

மணமகள் விவரம்
பிறந்த திகதி – 1987.09.14
மதம் – இந்து V
நட்சத்திரம் – ரோகினி
பாவம் – 33 1/2
சூ/செவ் – 10 இல்
கல்வி – பட்டதாரி
எதிர்பார்ப்பு – அரச உத்தியோகம்.

Kalyanamalai Vada.com தினசரி முகநூலிலும், யாழ் காலைக்கதிர் பத்திரிகையிலும் வெளிவரும் மணமக்களை நீங்களே தெரிவு செய்து எம்முடன் தொடர்புகொள்ள நாம் திருமணத்தை நிறைவேற்றித் தருவோம். மணமக்கள் விண்ணப்பப்படிவத்தினை புத்தகக் கடைகளிலும், பத்திரிகை விற்பனை நிலையங்களிலும் வாங்கி விண்ணப்பியுங்கள், முக நூலிலும் விண்ணப்பம் உண்டு. அலுவலக நேரம் காலை 9 தொடக்கம் 5 வரை. சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும்.
பதிவுக் கட்டணம் 1000 + 300

உப அலுவலகம்,
சந்தை வீதி,
இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி.
077 3434 415
077 8578 528

# தேசிய அளவில் ஜோ பிடென் முன்னணி முக்கியசில மாநிலங்களில் ட்ரம்ப் அலை!

## இறுதி முடிவு வர நீண்ட காலமாகலாம்

தேசிய அளவில் ஜோ பிடேன் அதிகம் வாக்குகளைப் பெற்று முன்னிலையில் உள்ளார். ஆனால் வெள்ளை மாளிகைக்கான பந்தையத்தில் வெற்றியைத் தீர் மானிக்கும் முக்கிய மாநிலங்களில் ட்ரம்ப் – பிடென் இருவருக்கும் இடையே மிக நெருக்கமான கடும் போட்டி நிலவுவதாக செய்திகள் வருகின்றன.

இதனை எழுதும் சமயத்தில் புளொரிடா, லோவா, டெக்ஸாஸ் போன்ற முக்கிய மாநிலங்களில் ட்ரம்ப் முன்னணியில் இருந்தார். ஆனால் தேசிய ரீதியில் ஜோ பிடேன் 220 தெரிவுகளையும் ட்ரம்ப் 213 தெரிவு களையும் பெற்றிருந்தனர்.

முடிவுகள் பரபரப்புடன் வெளியாகி வரும் நிலையில் ட்ரம்ப் இடையில் புகுந்து குழப்பத்தை ஏற்படுத்தும் விதமான அறிவிப்புகளை வெளியிட்டுவருகிறார். 'நாங்கள் வெற்றியீட்டிவிட்டோம்' என்று அறிவித்து நடு வில் வெற்றிக்கு அவர் உரிமை கோரியிருக்கிறார்.

முக்கிய மாநிலங்களில் ஈட்டிய வெற்றிகளையும், முன்னணி நிலைவரங்களையும் தனது பிரகடனத்துக்கு ஆதாரமாகக் காட்டி அறிவிப்புச் செய்துள்ளார் அவர்.

முறைகேடுகள் நடக்கின்றன எனக் கூறி வாக்கு எண்ணும் பணிகளை நிறுத்தப் போவதாகவும் அவர் மிரட்டியிருக்கிறார்.

மாறாக தனது ஆதரவாளர்கள் மத்தியில் உரையாற் றிய ஜோ பிடேன், 'வெற்றிக்கான பாதையில் சென்று கொண்டிருக்கின்றோம். எனினும் பொறுத்திருங்கள்' என்று அடக்கமாகக் கூறியிருக்கிறார்.

மிக முக்கியமான ஒரு மாநிலமான புளோரிடாவில் வெற்றியீட்டியதன் மூலம் ட்ரம்புக்கான வாய்ப்புகள் பிரகாசமாகி உள்ளன.

இந்த நிலைமை கடந்த 2016 தேர்தலின் பெறுபேறு களையே பிரதிபலிக்கின்றது என்று அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

அச்சமயம் அதிக வாக்குகளைப் பெற்று தேசிய அளவில் முதனிலைக்கு வந்த வேட்பாளர் ஹிலாரி கிளிண்டன் பின்னர் தோல்வியைச் சந்திப்பதற்கு அமெ



ரிக்க அதிபர் தேர்தல் முறைமை வழிவகுத்தது என்பது கவனிக்கத்தக்கது.

உலக தேர்தல் முறைமைகளில் விளங்கிக் கொள்வதற்குச் சற்றுச் சிரமமானது அமெரிக்க அதி பர் தேர்தல் நடைமுறை.

சிறிலங்கா, பிரான்ஸ் நாடுகள் போன்று அமெரிக்க ஜனாதிபதியை மக்கள் தாங்கள் விரும்பி நேரடியாக அவருக்கு வாக்களித்துத் தெரிவுசெய்வதில்லை. மாறாக இரண்டு பிரதான கட்சிகளுக்கும் மாநிலங்கள் ரீதியாக மக்களால் அளிக்கப்படும் வாக்குகளில் இருந்து தெரிவு செய்யப்படும் 538 தெரிவாளர்களே பின்னர் தங்கள் வாக்குகள் மூலம் அதிபர் யார் என்பதைத் தீர் மானிக்கின்றனர்.

இதில் ஒரு கட்சிக்கு குறைந்தது 270 தெரிவாளர்கள் கிடைத்தால் மட்டுமே அந்தக் கட்சியின் வேட்பாளர் வெள்ளைமாளிகைக்குள் முடி சூடலாம்.

இதைவிட அமெரிக்காவின் மொத்தம் 50 மாநி லங்களில் சனத்தொகையின் அடிப்படையில் செல் வாக்குக் கொண்ட மாநிலங்கள் இறுதி வெற்றியைத் தீர்மானிப்பதில் முக்கியமானவை.

அந்த வகையில் இரு பிரதான கட்சிகளினதும் கோட்டைகளாக விளங்கும் அரிஸோனா, புளொரிடா, ஜோர்ஜியா, மிக்சிக்கன், மினசொற்றா வட கரோலினா, பென்ஸில்வேனியா, விஸ்கான்சின் லோவா, ஒஹியோ, டெக்ஸாஸ் ஆகிய மாநிலங்கள் அதிபர் யார் என்பதைத் தீர்மானிக்கும் சக்தி மிக்கவை.

செனற் சபையை எந்தக் கட்சி கட்டுப்பாட்டுக்குள் எடுக்கிறது என்பதும் அதிபரைத் தெரிவு செய்வதில் முக்கிய பங்கு வகிக்கிறது.

கொரோனா பேரலைக்கு மத்தியிலும் அமெரிக்கர் கள் தங்கள் ஜனநாயகக் கடமையை நிறைவேற்று வதற்காக இம்முறை வாக்குகளை அள்ளி விளாசியி ருக்கிறார்கள்.

வைரஸ் நெருக்கடியைக் கையாளும் விதம் அதனோடு தொடர்புபட்ட பொருளாதார நெருக்கடிகள் என்பன இந்த முறை அதிபர் தேர்தல் வாக்களிப்பில் செல்வாக்குச் செலுத்திய முக்கிய காரணிகளாக உள் ளன.

கொரோனா வைரஸ் தொற்று காரணமாக தபால் மூலம் வாக்களித்தோர் எண்ணிக்கை உச்சத்தைத் தொட்டிருப்பதால் வாக்கு எண்ணும் பணிகள் நாட்கணக் கில் நீடிக்கும் நிலை உள்ளது.

50 மாநிலங்களிலும் ஏற்கனவே நடைபெற்று முடிந்ததபால் மூல வாக்களிப்பில் சுமார் நூறு மில்லியன் பேர் வாக்களித்து பெரும் வரலாற்றுச் சாதனையைப் படைத்துள்ளனர்.

நாட்டின் மொத்தம் 225 மில்லியன் வாக்காளர்களில் நூறு மில்லியன் பேர் தபால் மூலம் வாக்கைச் செலுத்தி இருக்கின்றமை அமெரிக்கத் தேர்தல் வரலாற்றில் ஒரு நூற்றாண்டு சாதனை என்று வர்ணிக்கப்படுகிறது.

வழமையாக இறுதி வாக்களிப்பு தினத்தன்று இரவோ அல்லது மறுநாளோ யார் அடுத்த அதிபர் என்பதைத் தெரிந்துகொள்ளக் கூடிய அளவுக்கு வாக்கு எண்ணும் பணிகள் முடிவடைந்திருக்கும். ஆனால் இந்த முறை அது சாத்தியம் அல்ல என்று தேர்தல் அதிகாரிகள் கூறுகின்றனர்.

மாநிலங்கள் தோறும் தபால் மூல வாக்குகள் வெவ் வேறு காலப்பகுதிகளில் எண்ணி முடிக்கப்படவுள்ளன. எனவே உத்தியோகபூர்வமான இறுதி முடிவு அறிவிக்கப்பட நாள்கள், வாரங்கள் ஆகலாம்.

## ஆதரவாளர்களுக்கு ஜோ பிடன் அமைதிகாக்க கோரிக்கை விடுப்பு



அமெரிக்க அதிபர் தேர் தல் தொடர்பாக முடிவுகள் வெளியாகி வரும் நிலை யில், ஆதரவாளர்கள் அமைதி காக்க வேண்டு மென்று ஜனநாயகக் கட்சி வேட்பாளர் ஜோ பிடன் வேண்டுகோள் விடுத்துள் ளார்.

தேர்தல் முடிவுகள் அறி விக்கப்பட்டு வரும் சூழலில் ஆதரவாளர்கள் இடையே பேசிய அவர், கடைசி வாக்கு எண்ணி முடிக்கும் வரை தேர்தல் முடியாது என்றார். தேர்தலில் வெற்றி கிடைக்கும் என்பதில் நம்பிக்கை கொள்ள வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார்.

வெற்றியை நோக்கிய சரியான திசையில் தாம் சென்று கொண்டிருக்கின்றார் எனக் கூறிய ஜோ பிடன், தற்போது அமைதி காப்பது போலத் தொடர்ந்து அமைதி காக்க வேண்டுமென்றும் ஆதரவாளர்க ளுக்கு வேண்டுகோள் விடுத்தார்.

## பிரான்ஸ் படையினர் நடத்திய தாக்குதலில் 50 இற்கும் மேற்பட்ட தீவிரவாதிகள் பலி!

மேற்கு ஆபிரிக்க நாடான மாலியில் ஐ.எஸ். தீவிரவாதிகளைக் குறிவைத்து பிரான்ஸ் இராணுவத்தினர் நடத்திய தாக்குதலில் 50 இற்கும் மேற்பட்ட தீவிரவாதிகள் கொல் லப்பட்டுள்ளனர்.

இதுதொடர்பாகபிரான்ஸ்பாதுகாப்புத்துறை அமைச்சர் ஃப்புளோரன்ஸ் விடுத்துள்ள அறிவிப்பில், பர்கானி என்ற இடத்தில் பிரான்ஸ் விமானப்படையினர் நடத்திய தாக்குதலில் 50 இற்கும் மேற்பட்ட ஐ.எஸ். தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர் எனக் குறிப்பிட்டுள்ளார். மேலும் ஏராளமான ஆயுதங்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் யார் வெல்வார் என்பது முக்கியமல்ல

### ஈரானின் ஜனாதிபதி ஹசன் ரௌஹானி

ஈரானைப் பொறுத்தவரை அமெ ரிக்க ஜனாதிபதித் தேர்தலில் யார் வெற்றிபெறுவர் என்பது முக்கியமான ஒன்று அல்ல என ஈரானின் ஜனாபதி ஹசன் ரௌஹானி தெரிவித்துள் ளார்.

இருப்பினும் சர்வதேச ஒப்பந்தங்கள் மற்றும் சட்டங்களை மதிக்கும் வகையில் அமெரிக்காவின் அடுத்த ஜனாதிபதி இருக்க வேண்டும் என கூறியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்துள்ள அவர் –

தெஹ்ரானைப் பொறுத்தவரை, அடுத்த அமெரிக்க நிர்வாகத்தின் கொள் கைகள் முக்கியமானவை என்றும் தேர்தலில் யார் வெற்றி பெறுகின்றார் கள் என்பது முக்கியமல்ல என்றும் குறிப்பிட்டார்.



## துருக்கி நிலநடுக்கத்தில் 90 மணி நேரத்தின் பின்னர் உயிருடன் குழந்தை ஒன்று மீட்பு!

துருக்கியில் ஏற்பட்ட நிலநடுக்கம் காரணமாகக் கட்டட இடிபாடுகளுக்குள் சிக்கிய 4 வயது சிறுமி 90 மணி நேரத்துக்குப் பிறகு உயிருடன் மீட்கப்பட்டாள்.

இதனைத் தொடர்ந்து அந்த சிறுமி உடனடியாக வைத்தியசாலையில்; சிகிச்சைக்காக சேர்க்கப் பட்டாள். இஸ்மீர் நகரில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் 20 இற்கும் மேற்பட்ட கட்டடங்கள் இடிந்து தரை மட்டமாகின.

இதனைத் தொடர்ந்து மீட்புப் பணிகள் தீவிரமாக நடைபெற்றுவந்தன. இந்த நிலையில் ஆய்தா என்ற 4 வயது சிறுமியின் முன கல்குரல் கேட்டு மீட்பு படை யினர் விரைந்து சென்று அவளைமீட்டனர். ஆனால் அந்த சிறுமியின் தாய் இடிபாடுகளில் சிக்கி உயி ரிழந்து விட்டார்.



## அமெரிக்க அதிபர் ட்ரம்புக்கு டுவிட்டர் நிறுவனம் கண்டனம்



அதிபர் தேர்தல் தொடர்பாக ட்ரம்ப் வெளியிட்ட பதிவுகளுக்கு டுவிட்டர் கண்டனம் தெரிவித் துள்ளது.

தேர்தலில் தலையிடும் வகையிலான செயலுக்கோ, தேர்தலில் குளறுபடிகளை மேற் கொள்ளும் வகையி லான செயலுக்கோ தனது சேவைகளைப் பயன்படுத்தக் கூடாதென்ற கொள்கையை டுவிட்டர் தொடர்ந்து கடைப்பிடித்து வருகிறது.

அத்தகைய பதிவுகளை மறைப்பது போன்ற நடவடிக்கையையும் டுவிட்டர் மேற்கொண்டு வரு கிறது. இந்நிலையில் ட்ரம்ப் இன்று வெளியிட்ட பதி வில், ஜனநாயகக் கட்சியினர் சதிமூலம் வெற்றியைத் தட்டிப் பறிக்க முயற்சிக்கின்றனர் எனக் குற்றம் சாட்டியிருந்தார்.

இது டுவிட்டர் கடைபிடிக்கும் கொள்கைக்கு முர ணாக இருந்ததால், அதை அந்நிறுவனம் மூடி மறைத்துள்ளது. மேலும் அந்த பதிவில் இருக்கும் கருத்துகள் சர்ச்சைக்குரியது எனவும், தேர்தல் அல் லது பிற செயல்களில் தவறாக வழிநடத்தும் வகை யிலானது எனவும் கூறியுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# அரசை எதிர்ப்பதற்கு அனைவரும் ஒரே அரங்கில் ஒன்றிணையவேண்டும்

## அணி திரட்டுகின்றார் ருவான் விஜேவர்தன

கொழும்பு, நவ.04

அரசமைப்புக்கான 20 ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் ஜனாதிபதியிடத்தில் பெருமளவான அதிகாரங்கள் உள்ளன. அதேபோன்று அரசாங்கத்துக்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை உள்ளது. இத்தகைய மிகவும் பலம்வாய்ந்த சக்தியை எதிர்ப்பதற்கு ஐக்கிய மக்கள் சக்தி உள்ளடங்கலாக நாமனைவரும் ஒரே அரங்கில் ஒன்றிணைவது அவசியமாகும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித்தலைவர் ருவன் விஜேவர்தன தெரிவித்தார்.

ஐக்கிய தேசயக் கட்சியின் தலைமைக்காரியாலயமான சிறிகொத்தாவில் நேற்று செவ்வாய்க்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டிருக்கிறார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு -

நாட்டில் கொரோனா வைரஸ் தீவிரமாகப் பரவிவரும் நிலையில், சுகாதாரப்பிரிவினர் ஒருவிதமாகவும் பாதுகாப்புப்பிரிவினர் வேறொரு விதமாகவும் கருத்துக்களைக் கூறிவருகின்றனர். வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களுடன் தொடர்புகளைப் பேணியவர்களை கட்டாயமாகத் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்த வேண்டும் என்று இராணுவத்தினர் கூறுகின்றனர்.

எனினும் ஒருவாரத்தில் எவ்வித அறிகுறிகளும் தென்படாவிட்டால் அவர்களை வீடுகளுக்கே அனுப்பி வைக்க முடியும் என்று சுகாதாரப் பிரிவினர் கூறுகின்றனர். இவற்றில் எதனை நம்புவது என்று தெரியவில்லை. எனவே இந்த விடயத்தில் அரசாங்கம் தலையிட்டு சரியான நடைமுறையை மக்களுக்குத் தெளிவுபடுத்துவது அவசியமாகும்.

களுத்துறை, கம்பஹா மாவட்டங்களில் உள்ள எமது கட்சியின் ஆதரவாளர்கள் வழங்குகின்ற தகவல்களின் படி அங்கு நிலைவரம் மிகவும் மோசமாக இருக்கின்றது. அரசாங்கம் வாக்குறுதியளித்தவாறு 5 ஆயிரம் ரூபாவை வழங்கவில்லை. அல்லது தமக்கு நெருக்கமானவர்களுக்கு மாத்திரமே அந்த நிதி வழங்கப்பட்டிருக்கிறது.

பாதிக்கப்பட்ட மக்கள் உணவை பெறுவதில்கூட பெருமளவான நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர். எனவே, இதுவிடயத்தில் அரசாங்கம் மக்களை முன்னிறுத்தி சிந்திப்பதுடன், அவர்களது பிரச்சினைகளுக்கான தீர்வுகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதேபோன்று 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் எதிர்வரும் 2021ஆம் ஆண்டுக்கு சுகாதாரத்துறைக்கு சுமார் 200 கோடி ரூபா நிதி குறைவாகவே ஒதுக்கப்பட்டுள்ளது. எனினும் பாதுகாப்பு அமைச்சு மற்றும் வீதி அபிவிருத்தி தொடர்பான அமைச்சு என்பவற்றுக்கு சுகாதார அமைச்சை விடவும் அதிகளவான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இவற்றிலிருந்து அரசாங்கம் எதற்கு முக்கியத்துவம் வழங்குகின்றது என்பது வெளிப்படுகின்றது.

அண்மையில் ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டாரவால் வெளியிடப்பட்ட கருத்தைப் பெரிதும் வரவேற்கின்றோம். அரசமைப்பிற்கான 20 ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் ஜனாதிபதியிடத்தில் பெருமளவான அதிகாரங்கள் உள்ளன.

அதேபோன்று அரசாங்கத்துக்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை உள்ளது. எனவே, நாம் மிகவும் பலம்வாய்ந்த ஒரு சக்தியையே எதிர்க்க வேண்டியிருக்கிறது. ஆகவே, நாம் மாத்திரமன்றி, ஐக்கிய மக்கள் சக்தி உள்ளடங்கலாக அனைத்து எதிர்க்கட்சிகளும் ஒரே மேடையில் ஒன்றிணைவது அவசியமாகும். தற்போதைய அரசாங்கத்தின் வசமுள்ள அதிகாரங்களைப் பார்க்கும்போது எதிர்காலத்தில் நாட்டில் ஜனநாயகம் நிலைபெற்றிருக்குமா என்ற சந்தேகமே எழுகிறது.

அதேபோன்று இந்த அரசாங்கத்துக்கு வாக்களித்த பலரும் அதற்காக இப்போது வருந்த ஆரம்பித்திருக்கிறார் கள். எனவே, எதிர்காலத்தில் இந்த அரசாங்கத்தைத் தோற்கடித்து ஜனநாயகத்தை நிலைநாட்டுவதற்கு அனைத்துக் கட்சிகளையும் ஒன்றிணைத்து வலுவானதொரு சக்தியை உருவாக்குவது அவசியமாகும்.



மேலும் கடந்த காலத்தில் கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக சீனாவால் பெருமளவில் நிதியுதவி வழங்கப்பட்டது. அந்த நிதி எதற்காகப் பயன்படுத்தப்பட்டது என்பதை அரசாங்கம் தெளிவுபடுத்த வேண்டும். கடந்த மார்ச் மாதத்திலிருந்து புதிதாகச் செயற்கை சுவாசக்கருவிகள் எவையும் கொள்வனவு செய்யப்படவில்லை. பி.சி.ஆர் பரிசோதனை உபகரணங்கள் கொள்வனவு செய்யப்படவில்லை. அவ்வாறெனின் இலங்கைக்கு வழங்கப்பட்ட நிதியுதவி எதற்காகப் பயன்படுத்தப்பட்டது?

அதுமாத்திரமன்றி 'சுவசரிய' அம்பியூலன்ஸ் வாகனங்களில் பொருத்தப்பட்டிருக்கும் செயற்கை சுவாசக் கருவிகளைக் கழற்றி, அவற்றை வைத்தியசாலைகளில் பொருத்துவதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என அறியமுடிகிறது. அவ்வாறு செய்தால் அவற்றை மீண்டும் அம்பியூலன்ஸ்களில் பொருத்துவது இயலாத காரியமாகும். ஆகவே நாட்டுக்கு வழங்கப்பட்ட நிதியுதவி எதற்காகப் பயன்படுத்தப்பட்டது என்பதை அரசாங்கம் வெளிப்படுத்த வேண்டும். - என்றார்.

## 63 ஆயிரத்து 600 இற்கு மேற்பட்டோர் இலங்கையில் சுயதனிமைப்படுத்தலில்!

கொரோனா வைரஸ் அச்சம் காரணமாக இலங்கை முழுவதும் 63 ஆயிரத்து 600 இற்கும் மேற்பட்ட நபர்கள் சுய தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

குறிப்பாக குருநாகல் மாவட்டத்தில் மொத்தம் 2 ஆயிரத்து 452 குடும்பங்கள் சுய தனிமைப்படுத்தப்பட்டுள்ளன என மாவட்ட செயலாளர் ஆர்.எம்.ஆர்.ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்களுக்கு 10 ஆயிரம் ரூபா பெறுமதியான அத்தியாவசியப் பொருள்கள் அடங்கிய பொதிகளை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

அதேபோல மேல் மாகாணத்தில் 11 ஆயிரத்து 900 இற்கும் மேற்பட்டவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

மேலும் குருநாகல் நகராட்சி எல்லைகளிலும் குளியாபிட்டிய பொலிஸ் பிரிவிலும் தனிமைப்படுத்தப்பட்ட ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேலும் கிரியுல்ல பகுதியும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளது. அந்தப் பகுதிகளிலும் பலர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## களுபோவில வைத்தியசாலையில் மேலும் இரு தாதியருக்கு தொற்று

கொழும்பு, நவ.04

கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையில் (களுபோவில) மேலும் இரு தாதியர்கள் கொரோனா தொற்றுக்கு உள்ளாகியுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

வைத்தியசாலையின் ஏழாவது விடுதியில் பணிபுரியும் இரு தாதியர்களே இவ்வாறு கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர்.

ஏற்கனவே களுபோவில போதனா வைத்தியாசாலையில் பணியாற்றிய வைத்தியர் இருவருக்கும் தாதியொருவருக்கும் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டது.

இந்த நிலையில் மேலும் இரு தாதியர்களுக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை கொழும்பு தீயணைப்பு பிரிவைச் சேர்ந்த வீரர் ஒருவரும் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளதாக வெளியான பி.சி.ஆர். முடிவுகளில் தெரியவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் கீழ் இரு ஒழுங்கு விதிகள் நிறைவேற்றம்!

### நேற்றைய நாடாளுமன்ற அமர்வில்

கொழும்பு, நவ.04

மருத்துவ கட்டளைச் சட்டத்தின் கீழ் இரண்டு ஒழுங்கு விதிகள் நேற்று நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டன.

இதில் ஓர் ஒழுங்குவிதி, நாட்டில் மருத்துவ சபையில் பதிவுசெய்யப்பட்ட வைத்தியராவதற்கு ஆகக்குறைந்தது உயர்தரத்தில் உயிரியல் விஞ்ஞானத் துறையில் 2(சி) விசேட சித்தி மற்றும் 1 (எஸ்) சாதாரண சித்தி பெற்றிருக்க வேண்டும் என்பதாகும்.

எனினும் இந்த யோசனை நடைமுறை சாத்தியமற்றது என நாடாளுமன்றத்தில் தனித்து வாதிட்ட ஜே.வி.பியின் தலைவர் அனுரகுமார திசாநாயகவால் சபையில் கடும் நெருக்கடிக்கு ஆளும் தரப்பு தள்ளப்பட்டது.

நேற்றைய விவாதத்தில் உரையாற்றிய சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி, இந்த இரண்டு ஒழுங்கு விதிகளும் இதற்கு முன்னரே நிறைவேற்றப்பட்டிருக்க வேண்டும் என்றும், இதன் ஊடாக வைத்தியத் துறையின் தரம் உறுதிப்படுத்தப்படும் என்றும் குறிப்பிட்டார்.

எதிர்க்கட்சியின் முதற்கோலாசான் லக்ஷ்மன் கிரியல்ல எழுப்பிய பிரச்சினையொன்றுக்குப் பதிலளித்த அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி, சுகாதாரப் பணிப்பாளர் நாயகத்தின் நியமனம் உரிய விதிமுறைகளுக்கு அமையவே மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது எனக் கூறினார். இதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் வழங்கப்பட்டிருப்பதாகவும் சுட்டிக்காட்டினார்.

ரஷ்ய பல்கலைக்கழகங்கள் மூன்றால் வழங்கப்படும் பட்டங்கள் மருத்துவ சபையால் தடை செய்கின்றமை தொடர்பில் கிரியல்ல எழுப்பிய பிரச்சினைக்குப் பதிலளித்த அமைச்சர், இது தொடர்பில் விரைவில் ஆராய்ந்து அறிவிப்பதாகவும், தற்காலிகமாக அத்தடையை நீக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் கூறினார்.

இந்நிலையில் குறித்த வர்த்தமானி அறிவித்தலை சட்டமாக்க சபையில் அனுமதி கேட்ட வேளையில் (மக்கள் விடுதலை முன்னணி) தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திசாநாயக சபையில் எதிர்ப்பை வெளிப்படுத்தினார்.

'ஒவ்வொரு வருடமும் உயிரியல் துறைக்குத் தெரிவாகும் மாணவர்களின் ஆகக் குறைந்த தகுதியில் திருத்தம் செய்யப்பட வேண்டும் என்ற விடயம் உள்ளடக்கக் வேண்டும்', 'ஒரு சட்டம் உருவாக்கப்படும் வேளையில் அது அடுத்த பரம்பரைக்கும் சார்ந்த ஒன்றாகும். எனவே இதனை வெறும் இரண்டு மணித்தியாலத்தில் தீர்மானிப்பது நியாயமானதல்ல.

எனவே இந்த இரண்டு ஒழுங்குவிதிகளையும் நிறைவேற்றாது அமைச்சுசார் ஆலோசனைக் குழுவில் இதுபற்றிக் கலந்துரையாடி திருத்தம் செய்ய வேண்டும்' எனவும் அவர் பரிந்துரைத்தார்.

எனினும், இதற்கு ஆளும் கட்சியினர் இணக்கம் தெரிவிக்காதமையுடன், நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவில் கலந்துரையாடப்பட்டமைக்கு அமைவாக இரண்டு ஒழுங்கு விதிகளையும் நிறைவேற்ற வேண்டும் என சபை முதல்வர் தினேஷ் குணவர்த்தன நாடாளுமன்றத்தில் தெரிவித்தார். இதன் பின்னர், அநுரகுமார திஸாநாயக்கவின் எதிர்ப்பையும் குறிப்பிட்டுக் கொண்டு இந்த இரண்டு ஒழுங்கு விதிகளும் நிறைவேற்றப்பட்டன.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 04.11.2020 இல் வெளியிடப்பெற்றது.